# சான் ஆண்டோனியோ தமிழ்ப்பள்ளி

இலாப நோக்கமற்ற 501 (C) வரி விலக்கு பெற்ற நிறுவனம்

# SAN ANTONIO TAMIL SCHOOL

Non-Profit 501 (c) Tax Exempt Organization

**MAY - 2024 | சான் ஆண்டோனியோ தமிழ்ப்பள்ளி ஆண்டு மலர் 2024**



# நிர்வாகம் மற்றும் கல்விக் குழு



திருமதி. மாலினி
மாரியப்பன் Phd

தலைவர்



திரு.சரவணன்
சர்வாரெட்டி MCA

துணை தலைவர்



திரு.பாலமுருகன்
ரங்கராஜு MS

செயலாளர்



திருமதி. ஆர்த்தி
சத்தியமூர்த்தி M.com,
FIII, CPCU

பொருளாளர்



திருமதி.விமலா
பெருமாள்சாமி MCA

முதல்வர்



திருமதி.த.சங்கீதா
தேவி ME

துணை முதல்வர்



திருமதி.பிரியதர்சினி
பார்த்தசாரதி MCA

கல்வி
ஒருங்கிணைப்பாளர்



திருமதி.
ஜ.மீனாட்சி MS

ஆலோசகர்



திரு. கார்த்திகேயன்
இராசிபாளையம் துரைராஜ்



திருமதி.
பூர்ணிமா குப்புசாமி



திருமதி.சுகன்யா
வெங்கடேசன்



திருமதி.பானுப்பிரியா
வேலாயுதம் மணியம்

# ஆசிரியர் குழு உரை

இரண்டாம் ஆண்டில் அடி எடுத்து வைக்கும் மலரே, பள்ளி ஆண்டு மலரே, உணர்வுகளுக்கு உயிர் கொடுத்து, படைப்புகளுக்கு பக்கம் கொடுத்து, கனவுகளுக்கு கவிதைக் கொடுத்து, கண்ணீருக்கு காவியம் கொடுத்து, எண்ணங்களுக்கு எழுத்தாணிக் கொடுத்து, நினைவுகளை நிஜமாக்கி, ஆசிரியர் மாணவர் படைப்புகளை குவியலாக்கி, ஒரு குடையின் கீழ் கொண்டுவந்து, குவியலை புதையலாக்கி புத்துணர்வுடன் வந்துவிட்டது நம் பள்ளியின் ஆண்டு மலர்.

ஒற்றை மின்னஞ்சலில் ஒட்டுமொத்த காகிதமும் அழகானது. ஆம், நம் கோரிக்கைக்கு இணங்க ஆசிரியர்களும் மாணவர்களும் பல்வேறு தலைப்புகளில் ஓவியமாக, காவியமாக, கதையாக, கவிதையாக, கட்டுரையாக, நம் இதயத்தை கவர, தம் படைப்புகளை பரிசாக்கிய அந்த அத்துணை படைப்பாளர்களின் படைப்புகள் இங்கே பறைசாற்றப்படுகின்றன. அத்துடன் நம் பள்ளியில் நடைபெற்ற போட்டி, போட்டியில் கண்ட வெற்றி, பல்வேறு நிகழ்வுகளில் நெகிழ்ச்சி அடைந்த தருணங்கள் என அணி அணியாய் அனைத்து முக்கிய நிகழ்வுகளையும் அணிவகுத்து வந்துள்ளது இந்த ஆண்டு மலர்...

தமிழ் மீது கொண்ட பேரன்பால் இணைந்து, தன்னிகரற்ற சேவை செய்து, தனக்கென தனி முத்திரைப் பதித்து, நம் தமிழ் பள்ளிக்கு உயிர் கொடுத்த அத்துணை உறவுகளுக்கும் நன்றி சொல்லி, இனிதே உதயமாகிறது சான் ஆண்டோனியோ தமிழ் பள்ளியின் ஆண்டுமலர்! நன்றி!



# வாழ்த்துரை

முதற்கண் நம்மை படைத்த கடவுளுக்கு நன்றி
இனிமைத் தமிழ்மொழி எமது – எமக்கின்பந் தரும்படி வாய்த்தநல் அமுது!
கனியைப் பிழிந்திட்ட சாறு – எங்கள் கதியில் உயர்ந்திட யாம்பெற்ற பேறு!
தனிமைச் சுவையுள்ள சொல்லை – எங்கள் தமிழினும் வேறெங்கும் யாங்கண்டதில்லை!
தமிழுண்டு தமிழ் மக்க ளுண்டு – இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு

– பாவேந்தர் பாரதிதாசன்

*சான் ஆண்டோனியோ தமிழ்ப் பள்ளியின் 2023-24 ஆம் ஆண்டின் ஆண்டு மலருக்கு வாழ்த்துரை எழுதுவதில் பெரும் மகிழ்ச்சி கொள்கிறேன். 20ஆம் ஆண்டில் அடி எடுத்து வைக்கும் சான் ஆண்டோனியோ தமிழ் பள்ளி ஒரு சில பெற்றோரின் தமிழ் மொழிப் பற்றாலும் அடுத்த தலைமுறை தமிழ் மொழியை மறந்துவிடக் கூடாதே என்ற ஆதங்கத்தாலும் 15 பிள்ளைகளோடு 2005ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அத்தமிழ்ப் பள்ளி இன்று 219 மாணவர்களுடனும், 35 க்கும் மேற்பட்ட தன்னார்வ ஆசிரியர்களுடனும், தமிழுக்குத் தொண்டு செய்ய எப்போதும் தயாராக இருக்கும் 25 க்கும் மேற்பட்ட கல்விக் குழு மற்றும் தொண்டு குழுவினர்களுடனும் தமிழ்ப் பள்ளி சிறப்பாக செயல்படுவது பெருமிதம் அடையச் செய்கிறது.*

*மாணவர்களின் மகிழ்ச்சியான கல்விகற்கைக்கு தமிழ்மொழி மற்றும் கலாச்சாரம் மீதான அவர்களது ஆர்வம் இன்றியமையாதது. இந்த ஆண்டு நாம் அறிமுகப்படுத்திய டெக்சாஸ் தமிழ் அகாடெமியின் புதிய பாடத்திட்டம் திறன் அடிப்படையிலான வளர்ச்சிக்கு ஏதுவாகவும், கற்போரின் தற்போதய திறன் நிலைக்கு ஏற்றவாறு இலக்குகளை நிர்ணயித்து வகுப்பறைக்கு வெளியிலும் மொழியைப் பயன்படுத்த கற்பிக்கும் வகையிலும், வடிவமைக்கப்பட்ட ஊடாடும் பாடத்திட்டமாகும். அதுமட்டுமல்லாமல் மாணவர் மற்றும் ஆசிரியர் இடையிலான நேரடி தொடர்பு மற்றும் தகவல் தொடர்புகளை மேம்படுத்தல், வகுப்பறைகளில் கலந்துரையாடல் மூலம் கற்பித்தல், செயல்முறை விளக்கம் மற்றும் திட்டப் பணிகள் மூலம் கற்றல், மாணவர்களின் காட்சிப்படுத்தல் மற்றும் படைப்பாற்றலை வளர்த்தல், அதன் மூலம் மாணவர்களின் மொழிக் கல்வித்திறனையும், விதிமுறைகளையும் வழிமுறைகளையும் உள்வாங்கி அதை செயல் படுத்தும் திறனையும் வளர்க்கும் வகையில் ஒவ்வொரு வகுப்பிலும் பாடத்திட்டம் வகுக்க ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு எம் பள்ளியின் தரம் ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து கொண்டே போகிறது. எங்கள் பள்ளியின்*

இத்தகைய உயரிய செயல்பாட்டிற்குக் காரணம் ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகத்தினர் கூட்டு முயற்சியுடனும் பொறுப்புடனும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுவதுதான்.

நம் பள்ளி மொழியை கற்பிப்பதோடு நின்று விடாமல் நமது பண்பாடு கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய மரபையும் அடுத்த சந்ததியினருக்கு அறிமுகப்படுத்தி வருவது பெருமகிழ்ச்சி. இயல் இசை நாடகம் என்ற மொழியின் பன்முக வெளிப்பாடுகளை போட்டியாகவும் திறமை நிகழ்ச்சி மூலமாகவும் மாணவர்கள் தங்கள் திறனை வெளிப்படுத்துவது பார்ப்பவர்களை மெய் சிலிர்க்க வைக்கும். மேலும் மாணவர்களின் பிற திறமைகளையும் ஊக்குவிக்கும் விதமாக திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி, பேச்சுப் போட்டி, தமிழ்த் தேனீ போட்டி, கட்டுரைப் போட்டி, ஆவணப்போட்டி மற்றும் நாடகப்போட்டி போன்ற போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பள்ளி ஆண்டு விழாவில் பரிசுகள் வழங்கப்படுகின்றது. இவ்வாண்டின் முக்கிய நோக்கம் நமது பள்ளியின் பாடத்திட்டம், பள்ளி கலாச்சாரம், சூழ்நிலை மற்றும் நிர்வாகம் திறம்பட நடப்பதன் சான்றாக காக்னியா என்னும் உலகளாவிய அமைப்பின் கல்வி தர அங்கீகாரத்தின் முத்திரையை புதுப்பிக்கும் பணியும் மாணவர்களுக்கு சீல் ஆப் பைலிட்டரசி *(Seal of Biliteracy)* என்னும் இருமொழித் திறன் முத்திரையை வாங்க வழி செய்வதும் தான்.

இவையெல்லாவற்றிற்கும் ஆதரவு தந்து வாரந்தோறும் தமிழ்ப் பள்ளிக்கு தங்கள் குழந்தைகளை அழைத்து வரும் பெற்றோருக்கும், தன்னார்வத்துடனும் உற்சாகத்துடனும் பாடம் நடத்தும் ஆசிரியர்களுக்கும், பள்ளியின் வகுப்பறை ஏற்பாடு, சுத்தம், பாதுகாப்பு, போக்குவரத்து ஒழுங்குமுறை மற்றும் தொழில்நுட்ப உதவி என்று ஏனைய பணிகளை செய்யும் தன்னார்வத் தொண்டர்களுக்கும், இவையனைத்தையும் ஒவ்வொருவரும் செவ்வனே செய்வதற்கு உறுதுணையாயிருந்த கல்வி குழு தலைவர்களுக்கும், ஆக்கப்பூர்வமான கருத்துக்களையும், உதவிகளையும், ஒத்துழைப்பையும் எம்மோடு இணைந்து வழங்கிக்கொண்டிருக்கும் பள்ளி மேலாண்மை நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாணவச் செல்வங்கள் அனைவரும் செம்மொழியாம் தமிழ் மொழியில் தேர்ந்து தமிழர் வாழ்வியல் பெருமைகளையும் உணர்ந்து நாளை சிறந்த குடி மக்களாக மிளிர்வதற்கும் சான் ஆண்டோனியோ தமிழ்ப் பள்ளி மேன்மேலும் புதிய உச்சத்தை தொடவும் எமது வாழ்த்துக்கள்.

**தமிழ் மொழியியலை நாம் உணர்வது மட்டுமல்லாமல் பிறரையும் உணர வைப்போம்!**
**தமிழ் மொழி கற்பித்தலையும் கற்கும் ஆர்வத்தையும் அடுத்த கட்டத்திற்கு உயர்த்திச் செல்வோம்!!**

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நன்று"

*(நினைப்பது எல்லாம் உயர்ந்த நினைப்பாகவே இருக்கட்டும். அவ்வுயர்வான எண்ணம் ஒருவேளை வேறு காரணங்களால் நிறைவேறாது போனாலும், பெரியோர் நம்மைப் பாராட்டுவர். ஆகவே, அது நிறைவேறியதாகவே கருதப்படும்)*

*நன்றி வணக்கம்!*

**திருமதி. மாலினி மாரியப்பன்**
**தலைவர்**
**சான் ஆண்டோனியோ தமிழ்ப்பள்ளி**



# தித்திக்கும் தேன் தமிழ் திக்கெட்டும் பரவட்டும்!!!

*2023-24* ஆம் வருடத்தைப் புதிய பள்ளி வளாகத்தில், புதிய பாடத்திட்டம் மற்றும் புதிய கல்விக் குழுவுடன் புத்துணர்ச்சியுடன் இனிதே தொடங்கினோம்.

ஒவ்வொரு கல்வி ஆண்டும் மாணவர் சேர்க்கை அதிகரித்து வருவதால் நம் பள்ளி ஒரு பெரிய வளாகத்தைத் தேர்ந்தெடுக்க முடிவு செய்து வேலர் பள்ளிக்கு மாறினோம். இந்த ஆண்டு நம் பள்ளியில் *219* மாணவ மாணவிகள் தமிழ் மொழியை கற்கின்றார்கள்.

மாறிவரும் டெக்சாஸ் மாநில அத்தியாவசிய அறிவு மற்றும் மொழித் திறன் எதிர்பார்ப்புக்கு ஏற்ப மாணவர்களின் நடைமுறை தமிழ் மொழித் திறமையை அதிகரிப்பதற்காக இந்த ஆண்டு முதல் நாம் டெக்ஸஸ் தமிழ் அகாடமியின் பாடத் திட்டத்தைத் தழுவ முடிவெடுக்கப்பட்டது. இந்த பாடத்திட்டம் மாணவர்களின் கேட்டுப் புரிந்துகொள்ளும் திறன், பேச்சுத் திறன், வாசிக்கும் திறன், மற்றும் எழுத்துத் திறனை வளர்க்கவும் அதிகரிக்கவும் உதவும்.

மேற்கூறிய திறமைகளை அதிகரிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டு போல இந்த ஆண்டும் பள்ளி அளவில் பல போட்டிகள் நடத்தப்பட்டன. குறிப்பாக கதை சொல்லும் போட்டி, பேச்சுப்போட்டி கட்டுரை போட்டி, நாடக போட்டி, மற்றும் புது முயற்சியாக ஆவணப் போட்டி நடத்தப்பட்டது. பல வேலைப் பளுக்களுக்கு இடையில் பெற்றோர்களும் ஆசிரியர்களும் மாணவர்களை உற்சாகப்படுத்தி மும்முரமாக போட்டிக்கு தயார் செய்து தங்களது திறமைகளை வெளிப்படுத்த உதவினர். மாணவர்களின் திறமை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருவது இந்த போட்டிகளில் மிகவும் தெள்ளத் தெளிவாக தெரிந்தது. மேலும் நமது தமிழ் பள்ளி மாணவர்கள் தமிழ் சங்கத்தின் திருவள்ளுவர் விழா மற்றும் பாரதியார் விழா நிகழ்ச்சிகளில் பங்கு பெற்றனர்.

இந்த வருடம் தமிழ் பள்ளியின் அங்கீகாரம் புதுப்பிக்கப்பட்டது. உயர்நிலைப் பள்ளியில் வெளிநாட்டு மொழி மதிப்பை பெறுவதற்கும் எங்கள் பாடத்திட்டத்தை அங்கீகரிக்கவும் உள்ளூர் பள்ளி மாவட்டத்திற்கு இன்று அங்கீகாரம் மிக முக்கியமானது. இதற்கு வலுவூட்டுவதற்காக நமது ஆசிரியர்கள் ஒவ்வொரு வாரமும் பாடத்திட்டம் தயார் செய்து பெற்றோர்களுக்கு அனுப்பி

வைத்தனர். மேலும் ஒவ்வொரு தேர்வுக்குப் பிறகும் மாணவர்களின் முன்னேற்றத்தை தெரியப்படுத்தும் விதமாக அறிக்கை அட்டை பெற்றோர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

பள்ளியின் தொடர் முன்னேற்ற திட்டமிடல் மற்றும் செயல்முறை பணிக்காகவும், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் முன்னேற்றத்திற்காகவும், இந்த வருடத்தில் பெற்றோர்களிடமும் ஆசிரியர்களிடமும் மாணவர்களிடமும் பள்ளி சூழல் மற்றும் கலாச்சார மதிப்பாய்வு நடத்தப்பட்டது. இந்த ஆய்வின் பின்னூட்டங்களின் அடிப்படையில் அடுத்த ஆண்டின் பள்ளியின் முன்னேற்றப் பணிகளும், மாணவர்களின் கற்றல் எதிர்பார்ப்பு மற்றும் சாதனை மேம்பட உதவும் சாத்தியமான திட்டங்களும் தீட்டப்படும்.

இந்த வருடம் முதல் முறையாக மாணவர்களின் தனித்திறமை மற்றும் குழுத் திறமையை வெளிப்படுத்தும் விதமாக திறமை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில் ஆசிரியர்களின் கடின உழைப்பு மற்றும் ஆர்வத்தால் அனைத்து குழந்தைகளுக்கும் பயிற்சி கொடுக்கப்பட்டு ஆர்வத்துடன் பங்கேற்று தங்கள் திறமையை வெளிப்படுத்தினர்.

மேலும் வட அமெரிக்க தமிழ் பேரவையின் சார்பில் நடைபெறும் வருடாந்திர மாநாட்டில் நமது மாணவர்கள் பலவிதமான போட்டிகளில் பங்கு பெற்று வருகின்றனர். அவர்கள் அனைத்து போட்டிகளிலும் வெற்றி பெற தமிழ் பள்ளியின் சார்பாக ஆதரவையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறோம்!

தமிழ் பள்ளியின் ஒவ்வொரு அசைவிலும் பள்ளியின் முன்னேற்றத்திற்காக தங்களின் பொன்னான நேரத்தை ஒதுக்கி சேவை செய்யும் தன்னார்வலர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கோடான கோடி நன்றிகள்! ஒவ்வொரு சனிக்கிழமையும் தவறாது பள்ளிக்கு வரும் மாணவச் செல்வங்களுக்கும் அவர்களை ஊக்கப்படுத்தி பள்ளிக்கு அழைத்து வரும் பெற்றோர்களுக்கும் நன்றி மட்டும் சொல்வது மிகையாகாது!

மேற்கூறிய யாவையும் செவ்வனே செயல்படுத்துவது என்னுடன் கல்விக் குழுவில் இணைந்து பணியாற்றும் துணை முதல்வர், கல்வி ஒருங்கிணைப்பாளர் மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்களின் உதவியில்லாமல் சாத்தியமாகாது. கல்விக் குழு மற்றும் நிர்வாகக் குழு நண்பர்களுக்கு எனது நன்றிகள் மற்றும் வாழ்த்துக்கள்!


## திருமதி.விமலா பெருமாள்சாமி

### முதல்வர் MCA

### சான் ஆண்டோனியோ தமிழ்ப்பள்ளி

திருமதி.பானுப்பிரியா மதன்
ஆசிரியை, சான் ஆண்டோனியோ தமிழ்ப்பள்ளி

# அண்ணிய நாட்டில் என் அமுதன்னை



## அன்று அந்த நாள்:

ஆழியிலே இணையும் ஆற்றைப் போல்
ஆசிரியை பணியில் ஆனந்தமாய் இணைந்தேன்!
சிட்டுக்குருவியாய் சிறகடித்துப் பறந்தேன்....
ஆசிரியையாய் அல்லாமல், மாணவியாய்
தேடி தேடி பல புத்தகம் தினம் படித்தேன்!
பாடசாலையில் நின்றமாத்திரத்தில் என் வலிகள்
நீர் மேல் எழுத்துப்போலானதை உணர்ந்தேன்!
பெறாத எம் பிள்ளைகள் பின்னால் ஓடினேன்,
பிள்ளைகளுக்காக ஓடியதில் பெறும் மகிழ்ச்சியடைந்தேன்...
பிள்ளைகளுடன் பயணித்து பாதி வயது குறைந்தேன்!
கருத்தரங்கு முதல் கல்லூரி ஆண்டுவிழா வரை
எம் மக்களுடன் மான் போல் ஓடினேன்...
மலரும் மணமுமாய் எம் மக்களுடன் இணைந்தேன்!
ஓடி ஓடி ஒருநாள் இனம் பிரிந்த மான் ஆனேன்! ஆம்,
தூரம் சென்று எம்கல்லூரியை விட்டு பிரிந்து அமைதியானேன்!
சில காலம் கழித்து அண்ணிய நாட்டிற்கு வந்தேன்

## இன்று இந்த நாள்:

ஆழியில் முத்துப்போல் அண்ணிய நாட்டில்
என் அன்னை!
என்னை அன்போடு அரவணைத்தால்!
சென்ற ஆன்மா திரும்பி வந்தது!
எழுந்தேன், இணைந்தேன், மறுபடியும் ஆசிரியை!
எம் பள்ளி, எம் வகுப்பறை, எனக்கே எனக்கான
பெறாத எம் பிள்ளைகள்!
எம் பிள்ளைகள் பின்னால்
மறுபடியும் மான் போல் ஓடுகிறேன்...
வான்பார்த்த மயில் போல் மகிழ்ச்சியில் ஆடுகிறேன்!
அனைத்திற்க்கும் அந்தமாகிய என் அன்னையே!
தமிழ் பள்ளியே! இருகரம் கூப்பி
என்னை அணைத்துக்கொண்டாய்!
உன்னுடன் இணைத்துக்கொண்டாய்!
உனக்கு கோடான கோடி! நன்றிகள்!



# முத்துவின் நல்ல குணம்

**கீத்திகா இரத்தினகுமார் (I1A-B)**

குறள் -314 அறத்துப்பால் ( இன்னா செய்யாமை )

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்

விளக்கம் : ஒருவருக்கு துன்பம் தந்தவரை தண்டித்தல் என்பது அவர் வெட்கி தலை குனியும்படி அவருக்கு நல்லது செய்து விடுவதே ஆகும்.

பூஞ்சோலை என்ற கிராமத்தில் முருகேசன் என்ற பண்ணையார் வாழ்ந்து வந்தார். அவரது வயலில் முத்து என்ற விவசாயி வேலை செய்து வந்தான். முத்துவின் மனைவி கமலாவும் பண்ணையாரின் வீட்டில், வீட்டு வேலைகளை செய்து வந்தார்.முருகேசனின் மகள் வாணியும் முத்துவின் மகள் மீனாட்சியும் ஒரே பள்ளியில் 6ஆம் வகுப்பு படித்து வந்தனர். மீனாட்சி படிப்பிலும் விளையாட்டிலும் கெட்டிக்காரி. இதனால் வாணிக்கு மீனாட்சி மீது பொறாமை உண்டு.

குழந்தைகள் தினத்தன்று அவர்களது பள்ளியில் நடனப் போட்டி, ஓவியப்போட்டி, பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி என நிறைய போட்டிகள் நடைபெற்றது. இப்போட்டிகளில் மீனாட்சியே முதலிடம் பெற்றாள். வாணியால் அனைத்து போட்டிகளிலும் வெற்றி பெற முடியவில்லை. முதலிடம் பெற்ற மீனாட்சியை பள்ளி தலைமை ஆசிரியர் பரிசுகள் கொடுத்து, பாராட்டி பேசினார். வாணிக்கு இதனால் கோபம் ஏற்பட்டு முருகேசனிடம் சென்று அழுதாள். முருகேசனுக்கும் தன்னிடம் வேலை பார்க்கும் ஒரு வேலைக்காரனின் மகள் தன் மகளை விட பரிசுகளையும் பாராட்டுகளையும் பெற்றது மிகுந்த கோபத்தை ஏற்படுத்தியது. முத்துவின் குடும்பத்தை வெறுக்கத் தொடங்கினார்.



தினமும் முத்துவிற்கு வயலில் கடுமையான வேலைகளை கொடுக்க ஆரம்பித்தார் முருகேசன். சம்பளப் பணத்தையும் குறைத்துக் கொடுத்தார். முத்துவின் மனைவி கமலா பண்ணையாரின் வீட்டில் சில பொருட்களைத் திருடி விட்டதாக பொய்யாகக் கூறி அவளை வேலையில் இருந்து நிறுத்தி

விட்டார். இதனால் முத்துவும் கமலாவும் மிகவும் மனம் வருந்தினர் .

சில நாட்கள் சென்றன.ஒரு நாள் பண்ணையார் அவரது வாகனத்தில் வெளியூருக்குப் புறப்பட்டார். அப்போது எதிரே வேகமாக வந்த வாகனத்தில் இடித்து விபத்து ஏற்பட்டது. பண்ணையாருக்கு அடிபட்டு நிறைய இரத்தம் கொட்டியது. அப்போது அவ்வழியாக முத்துவும் கமலாவும் வந்தனர். அவர்கள் பண்ணையாரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். முத்து தனது இரத்தத்தை பண்ணை யாருக்குக் கொடுத்து அவரை காப்பாற்றினான். முத்துவின் நல்ல குணத்தை உணர்ந்த பண்ணையார் வெட்கி தலை குனிந்தார்.முத்துவிடமும் கமலாவிடமும் மன்னிப்பு கேட்டார்.

### திருக்குறளின் சிறப்புகள்

1. திருக்குறளின் முதல் பெயர் - முப்பால்
2. திருக்குறளில் உள்ள அதிகாரங்கள் - 133
3. திருக்குறள் அறத்துப்பாலில் உள்ள குறட்பாக்கள் - 380
4. திருக்குறள் பொருட்பாலில் உள்ள குறட்பாக்கள் - 700
5. திருக்குறள் காமத்துப்பாலில் உள்ள குறட்பாக்கள் - 250

## வேடிக்கை விடுகதைகள்

1. ராமர் உடைக்காத வில் , எவரும் செய்யாத வில்? - அது என்ன?
2. இருப்பது இருவர்,பார்ப்பது ஓரிடத்தில் - அது என்ன?
3. புறப்பட்ட இடம் தெரியும், போய்ச் சேரும் இடம் தெரியாது - அது என்ன?
4. சிவப்புப் பைக்குள் சில்லறை கொட்டிக் கிடக்குது - அது என்ன?
5. நான்கு இடுக்குகளில், ஐந்து அடுக்குகள் - அது என்ன?
6. அடி காட்டுக்கு, நடு மாட்டுக்கு, நுனி வீட்டுக்கு - அது என்ன?
7. இடி இடிக்கும்,மின்னல் மின்னும்,ஆனால் மழை பெய்யாது - அது என்ன?
8. வெளுத்த ஆளுக்கு கறுத்த தலைப்பாகை - அது என்ன?
9. சத்தம் இல்லாமல் மூடித் திறக்கும் கதவுகள் - அது என்ன?
10. ஆயிரம் பேர் வந்தாலும் வந்த சுவடு தெரியாது - அது என்ன?
11. பூவில் பிறக்கும், நாவில் இனிக்கும் - அது என்ன?
12. மழையில் நனையும்,வெயிலில் காயும், வெளியில் மலரும், வீட்டில் சுருங்கும் - அது என்ன?
13. நடக்க முடியாது, ஆனால் நகராமல் இருக்காது -அது என்ன?
14. பல கால் ஊன்றி பல்லாண்டு வாழ்வான் - அவன் யார்?
15. சுவைத்திட வந்திடும், சுவையாக பாடிடும் -அது என்ன?
16. காய்க்காத மரத்திலே கனி இருக்கு , கண்டு பறித்தால் சுவை இருக்கு - அது என்ன?
17. வெட்டிக் கொள்வான் , ஆனாலும் ஒட்டிக் கொள்வான் - அவன் யார்?
18. உடன் வருவான், உதவிக்கு வர மாட்டான் - அவன் யார்?
19. உயரப் பறப்பவனுக்கு வால் உண்டு, கால் இல்லை - அவன் யார்?
20. பல் துலக்காதவனுக்கு உடம்பெல்லாம் பற்கள் - அவன் யார்?
21. அருகருகே பேசாத அண்ணன் , தம்பி -அவன் யார்?
22. மழைக்கு குடை பிடிக்காதவன், கடிக்க உணவு ஆவான் - அவன் யார் ?
23. வினா இல்லாமல் ஒரு விடை - அது என்ன?
24. சடக்கென்று வருவான், சத்தமிட்டு போவான் - அவன் யார்?
25. குரல் இல்லாதவன் கூப்பிடுகிறான் -அவன் யார்?



6. திருக்குறளில் உள்ள மொத்த குறட்பாக்கள் - 1330

7. திருக்குறளில் உள்ள சொற்கள் -14,000

8. திருக்குறளில் உள்ள மொத்த எழுத்துகள் - 42,194

9. திருக்குறளில் தமிழ் எழுத்துகள் 247 இல் ,37 எழுத்துகள் மட்டும் இடம் பெறவில்லை.

10. திருக்குறளில் இடம்பெறாத ஒரே எண் - ஒன்பது

11. திருக்குறளில் பயன்படுத்தாத ஒரே உயிர் எழுத்து - ஔ

12. திருக்குறளில் அதிகம் பயன்படுத்தப்பட்ட ஒரே எழுத்து - னி (1705)

13. திருக்குறளில் ஒரு முறை மட்டும் பயன்படுத்தப்பட்ட எழுத்துகள் - ளீ, ங

14. திருக்குறளில் இடம்பெறாத இரு சொற்கள் - தமிழ், கடவுள்

15. திருக்குறளில் இடம்பெறும் இரு மலர்கள் - அனிச்சம், குவளை

16. திருக்குறளில் இடம்பெறும் இரு மரங்கள் - பனை, மூங்கில்

17. திருக்குறளில் இடம்பெற்ற ஒரே விதை - குன்றிமணி

18. திருக்குறளில் இடம்பெற்ற ஒரே பழம் - நெருஞ்சிப்பழம்

19. திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பெற்ற ஆண்டு -1812

20. திருக்குறள் மூலத்தை முதன்முதலில் அச்சிட்டவர் - தஞ்சை ஞானப்பிரகாசர்

21. திருக்குறளுக்கு முதன்முதலில் உரை எழுதியவர் - மணக்குடவர்

22. திருக்குறள் 26 மொழிகளில் வெளிவந்துள்ளது.

23. திருக்குறளை முதன்முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் - ஜி .யு.போப்

24. திருக்குறளை ஆங்கிலத்தில் 40 பேர் மொழி பெயர்த்துள்ளனர்.

25. திருக்குறளை நரிக்குறவர் பேசும் 'வக்ரபோலி' மொழியிலும் மொழிபெயர்த்துள்ளனர்.

# திருக்குறள் கதை



ஹர்ஷினி கோலப்பன்,

E 1 C மாணவி

**எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு.**

எதையும் எண்ணிய பின்னரே துணிந்து துவங்க வேண்டும் துவங்கிய பின் எண்ணுதல் குற்றம்.

முயலுக்கும் ஆமைக்கும் நடந்த ஓட்டப்பந்தய கதையை நாம் முன்பு படித்திருப்போம். ஆனால் அந்த கதையில முயல் பாதி வழியில் தூங்குவதும் ஆமை பந்தயத் தூரத்தை கடந்து ஜெயித்திருக்கும். இதுவும் முயலுக்கும் ஆமைக்கும் நடந்த ஒரு கதை தான் ஆனால் இதோட முடிவு கொஞ்சம் வித்தியாசமானது. இதிலயும் அதே மாதிரி தான் ஆமைக்கும் முயலுக்கும் நடுவில் ஓட்டப்பந்தயம் நடந்தது. ஆனால் இதில் ஜெயிக்கிறவங்களுக்கு ஆமை தன்னிடம் இருக்கக்கூடிய ஒரு பை கேரட்டை தருகிறேன் என சொல்லியது. அதற்கு முயல் சொல்லியது என்கிட்ட ஏற்கனவே நிறைய கேரட் இருக்கிறது என்று. ஆனாலும் திரும்பவும் இன்னொரு பைக்கு ஆசைப்பட்ட முயல் சரி ஓட்டப்பந்தயம் வைத்துப் பார்க்கலாம் என்று ஆமையை பந்தயத்துக்கு கூப்பிட்டது. ஆமையும் முயலும் ஓட்டப்பந்தயத்தில் ஓடியது வழக்கம் போல முயல் பாதி தூரத்தை கடந்ததுக்கு பின்பு ஒரு மரத்து நிழலில் சாய்ந்து ஓய்வு எடுத்தது. பின்பு யோசித்து பார்த்தது எப்படியும் நம்ம தோத்துருவோம் என தெரிந்த ஆமை திரும்பவும் எதுக்கு நம்மை பந்தயத்துக்கு கூப்பிட்டது என அது யோசிக்க அப்போது தான் அதற்க்கு புரிந்தது தன் வீட்டில் இருக்கக்கூடிய கேரட்டை எடுக்க ஆமை ஒருவேளை திட்டம் போட்டு இருக்குமோ! என்று அதுக்கு ஒரு பயம் இருந்தது. திரும்பவும் வீட்டுக்கு போய் பார்த்தால் வீட்டில் இருந்த கேரட்டை காணோம். ஆமை அந்த கேரட்டை எடுத்துவிட்டது. முயல் திரும்பவும் ஏமாந்தது.



ஹன்சிகா காளிச்சரண்

# சோம்பேறி முயல்

ஒரு ஊரில் முருகன் என்ற ஒரு விவசாயி இருந்தார். அவருக்குச் சொந்தமான நிலத்திற்கு அருகில் ஒரு பெரிய மரம் ஒன்று இருந்தது. அந்த மரத்தின் அடியில் இருந்த பெரிய பொந்தில் முயல்கள் கூட்டமாக வாழ்ந்து வந்தன. அதில் மிட்டு, கிட்டு, சிட்டு, பிட்டு என்ற நான்கு முயல்கள் நண்பர்களாக இருந்தது. மிட்டு முயலுக்கு சாப்பிடுவதில் அதிக ஆர்வம் உண்டு. ஆனால் வேலை எதுவும் செய்யாமல் சோம்பேறியாக இருக்கும். இதனால் மற்ற நண்பர்கள் மூவரும் மிட்டு முயலுக்கு இப்படி இருந்தால் உடலுக்கு நல்லதல்ல, உடல் உழைப்பு இல்லாமல் இருந்தால் அனைத்து வியாதிகளும் வரும் என்று அறிவுரை கூறும். ஆனால் மிட்டு முயலோ எதுவுமே காதில் விழுகாதது போல சாப்பிடுவதில் மட்டுமே குறியாக இருக்கும்.



விவசாயி முருகன் தன் நிலத்தில் நிறைய காய்கறிகளும், பழங்களும் பயிரிட்டு இருந்தார். விலங்குகளிடம் இருந்து அவற்றை காப்பற்ற அவரது நிலத்தைச் சுற்றி வேலி இட்டிருந்தார். அறுவடைக் காலம் என்பதால் அவரது தோட்டத்தில் காய்கறிகளும், பழங்களும் அறுவடைக்குத் தயாராகி வண்ணமயமாக காட்சி அளித்தது. பழங்களின் வாசனை அந்த வழியில் செல்லும் அனைவரையும் ஈர்த்தது. வழியில் செல்வோரையே ஈர்க்கும் வாசனை அருகிலேயே இருக்கும் முயல்களை கவராமல் இருக்குமா?

பழங்களின் வாசனையில் மயங்கிய முயல்கள் அதை ருசி பார்க்க முடிவு செய்தன. நான்கு முயல்களும் என்ன செய்யலாம் என்று யோசித்தது. கிட்டு முயல் மற்ற முயல்களிடம் நாம் நால்வரும் ஒவ்வொரு திசையில் சென்று அந்த வேலியில் ஏதாவது ஓட்டை இருக்கிறதா என்று பார்க்கலாம், பின் அதன் வழியே உள்ளே சென்று காய்கறிகளையும், பழங்களையும் ருசிக்கலாம் என்றது.






இதைக்கேட்ட மிட்டு முயலுக்கு மகிழ்ச்சியாக இருந்தா லும் வேலியை சுற்றி சோதனை செய்ய வேண்டுமே என்று எண்ணியது. இருந்தாலும் மெது வாக வேலியின் ஒரு பக்கமாக நடக்கத் துவங்கியது மிட்டு முயல். சிட்டுவும், பிட்டுவும் ஏற்கனவே ஓடத் துவங்கி இருந்தது.

சிட்டுவின் கண்களில் பட்டது ஒரு ஓட்டை. அதைப் பார்த்ததும் ஓடி வந்து அனைவரிடமும் கூறியது சிட்டு. நான்கு முயல்களும் அந்தச் சிறிய பொந்தின் வழியாக முருகனின் காய்கறித் தோட்டத்திற்குள் சென்றன. மிட்டுவைத் தவிர மற்ற மூன்று முயல்களும் அளவாக சாப்பிட்டது. ஆனால் மிட்டுவோ அனைத்து காய்கறிகளையும், பழங்களையும் ஒன்று விடாமல் சாப்பிட்டுக்கொண்டிருந்தது. சத்தம் கேட்டு வந்த முருகனை தூரத்தில் கண்ட மற்ற முயல்கள் எச்சரிக்கை செய்தும் அதைக் காதில் வாங்காமல் வயிறுமுட்ட சாப்பிட்டுக்கொண்டே இருந்ததது மிட்டு. முருகன் அருகில் வந்ததும் மற்ற மூன்று முயல்களும் சிறிய பொந்தின் வழியாக தோட்டத்தை விட்டு வெளியேறியது. மிட்டுவையும் வேகமாக வெளியேறுமாறு அறிவுறுத்தின. மிட்டுவும் கையில் இருந்த தக்காளியை தூக்கி எறிந்துவிட்டு பொந்தில் நுழைய முயன்றது ஆனால் வயிறுமுட்ட சாப்பிட்டு இருந்ததால் வயிறு பெரிதாகி பொந்தில் நுழைய மிகவும் கடினமாக இருந்தது. இதைக் கண்ட மற்ற மூன்று முயல்களும் மறு பக்கத்திலிருந்து மிட்டுவை இழுத்து காப்பற்ற முயன்றது. முயல் தப்பிக்க முயல்வதைக் கண்ட முருகன் கையில் இருந்த கத்தியை தூக்கி எறிந்தார். மற்ற முயல்கள் மிட்டுவை முக்கால்வாசி இழுத்திருந்ததால் முருகன் எறிந்த கத்தி கிட்டுவின் வாலில் பட்டு வால் இரண்டு துண்டானது. முறிந்த வாலுடன் மிட்டு தப்பித்தது. நண்பர்கள் எச்சரிக்கை செய்தும் சாப்பிடுவதை நிறுத்தாமல் இருந்ததால் எனக்கு இருந்த வால் அறுந்த வால் ஆகி விட்டதே என்று மிகவும் வருந்தியது மிட்டு.

அறுபட்ட வாலுடன் இருந்ததால் மற்ற முயல்கள் அனைத்தும் அரை வால் மிட்டு என்று கேலியும் கிண்டலும் செய்தன. அன்று முதல் மிட்டு முயல் அதன் சோம்பேறித்தனத்தையும், பேராசையையும் முற்றிலும் கைவிட்டது.

**நீதி: பேராசை பெரு நஷ்டம்.**

## வேடிக்கை விடுகதைகள் விடைகள்





| | | |
|---|---|---|
| 1. வானவில் | 10. எறும்புகள் | 19. பட்டம் |
| 2. கண்கள் | 11. தேன் | 20. சீப்பு |
| 3. புகை | 12. குடை | 21. ரயில் தண்டவாளம் |
| 4. மிளகாய் | 13. கடிகாரம் | 22. காளான் |
| 5. விரல்கள் | 14. ஆலமரம் | 23. பணிவிடை |
| 6. நெல் | 15. வண்டு | 24. தும்மல் |
| 7. பட்டாசு | 16. தேன்கூடு | 25. தொலைப்பேசி |
| 8. தீக்குச்சி | 17. கத்தரிக்கோல் | |
| 9. கண் இமைகள் | 18. நிழல் | |





# தமிழ் அவளை மீட்டெடுத்தது

**மணிகண்டனின் சுகன்யா**

ஆசிரியை, சான் ஆண்டோனியோ தமிழ்ப்பள்ளி

பள்ளி நாட்களில் இருந்தே மிகவும் சுட்டியான சிறுமி அவள். படித்ததெல்லாம் தமிழ் வழிக்கல்வி. படிப்பின் மீது அலாதியான பற்று அவளுக்கு. படிப்பு மட்டும் அல்ல அதோடு சேர்த்து நடனம், பேச்சுப் போட்டி, பட்டிமன்றம் என அனைத்தையும் ஒரு கை பார்த்தாள். பள்ளியில் நடந்த எல்லா போட்டிகளிலும் அவளை பங்கு கொள்ளச் சொல்லி ஊக்குவித்தது அவளின் இரு தமிழாசிரியர்கள் ஜோதி மற்றும் ஏகம்மை. அதனால்தானோ என்னவோ அந்த தமிழாசிரியர்கள் மீது மட்டுமல்ல அவர்கள் சொல்லிக் கொடுத்த அந்த தமிழின் மீதும் அவள் அன்பு அதிகரித்தது. தானும் பின்னாளில் ஒரு ஆசிரியராக வேண்டுமென அவள் தினமும் நினைத்தாள்.



பன்னிரண்டாம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளியானது. 90 சதவீத மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்ற அவளை பொறியாளர் ஆக்க வேண்டும் என அவளின் தாய் விரும்பினாள். அம்மா - தன் வாழ்வையே குடும்பத்திற்காக அர்ப்பணிக்கும் ஒரு உயிர்.என்னதான் அவளுக்கு ஆசிரியர் ஆக வேண்டும் என ஆசை இருந்தாலும் அம்மாவுக்காக பொறியியல் படிக்க சம்மதித்தாள்.

பன்னிரெண்டு வருடங்களாக தமிழ் வழியில் படித்த அவளுக்கு பொறியியல் கல்வி, அதிலும் அனைத்து பாடங்களும் ஆங்கிலத்தில் படிப்பது சவாலாக இருந்தது. தமிழ் வழிக்கல்வியில் சுதந்திர பறவையாக இருந்த அவள் ஆங்கிலக் கல்வியில் நத்தை தன் ஓட்டுக்குள் ஒளிவதைப் போல பயந்து தன்னை குறுக்கிக் கொண்டாள். முதல் வருடம் இப்படி பயத்தோடே நகர்ந்தது. இரண்டாவது வருடம் அவள் மெல்ல சுதாரிக்கத் தொடங்கினாள். இனி நாம் ஆங்கிலத்தைக் கண்டு அஞ்ச வேண்டாம். எது புரியவில்லையோ அதை தமிழில் மொழியாக்கம் செய்து புரிந்து படிக்கலாம் என அங்கும் தமிழை பற்றிக் கொண்டாள். படித்தாள்.

புரிந்து படித்தாள். பிடித்துப் படித்தாள்.

கல்லூரிப் படிப்பை முடிக்கும் முன்பே முதல் நேர்காணலிலேயே ஒரு மென்பொருள் நிறுவனத்தில் வேலைக்கும் தேர்வானாள். ஒன்றல்ல, இரண்டல்ல சுமார் ஒன்பது ஆண்டுகள் எப்படி மென்பொருள் நிறுவனத்தில் ஓடியதென்றே தெரியவில்லை. நாளடைவில் மிகவும் பழகி பிடித்துப் போனது அந்த வேலை. உழைத்தாள். அவளுக்காக, அவள் குடும்பத்துக்காக.

தெரியாமல் கூட தன் குழந்தைகளுக்கு தீங்கு நினைப்பதில்லை அம்மா. அம்மா ஒருத்திக்காக பொறியியல் படித்தாள். வேலையில் சேர்ந்தாள். அது அவள் வாழ்வையே மாற்றியது. அன்புப் பாதையில். ஆம், தனது நண்பனையே மணம் முடிக்கிறாள்.

கணவனுக்கு வெளிநாட்டில் வேலை கிடைக்கிறது. வயிற்றில் அவர்களின் எட்டு மாத காதல். அவளுக்கு இரண்டு வழிகள் இருந்தது. ஒன்று குழந்தையை வளர்த்துக்கொண்டு இந்தியாவில் தன் எதிர்காலத்தை மென்பொருள் நிறுவனத்தில் தொடர்வது. மற்றொன்று வேலையை விட்டு விட்டு கணவரோடு வெளிநாடு செல்வது. எதை விட? எதை தேர்ந்தெடுக்க என குழம்பி நிற்கிறாள். நீ எந்த முடிவெடுத்தாலும் அதற்கு நான் துணை நிற்பேன் என அசையா நம்பிக்கை கொடுத்து அவள் அருகில் கணவன் நிற்கிறான். சற்று சுதாரித்து தன் கணவனின் கரம் பற்றினாள் அவள். வேலையெல்லாம் இரண்டாம் பட்சம் தான். நீ, குழந்தை தான் எனக்கு முதலில் என சொல்லி தன் ஆருயிர் கணவருக்காக தனக்கு பிடித்த வேலையை விட்டு விட்டு வெளிநாடு வருகிறாள் கணவரின் வேலைக்காக. சுமார் ஒன்பது வருடங்களாக அவள் கட்டிய சாம்ராஜ்யம் அவள் கண்முன்னே தகர்கிறது.

> கணவனோ எதை செய்தால் உனக்கு மகிழ்ச்சியோ அதை செய். குழந்தையைப் பற்றி கவலைப் படாதே. அவனை நான் பார்த்துக் கொள்கிறேன். நீ உனக்கு பிடித்ததை செய்.....



நிறைமாதத்தில் வெளிநாடு வந்தவளுக்கு இரண்டு மாதத்தில் வைரம் போல ஒரு ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்தது முதல் ஆறு மாதங்கள் கடகடவென உருண்டோடியது. காரணமே தெரியாமல் மகப்பேறுக்கு பிறகான மனச்சோர்வு இவளை ஆட்கொள்கிறது.

எதிலுமே விருப்பமின்மை, தாழ்வு மனப்பான்மை என அவளையே அவள் வருத்திக் கொண்டாள்.

அப்போது தான் அமெரிக்க தமிழ்ப் பள்ளியில் தமிழாசிரியராக தொண்டு புரிய ஆள் சேர்கிறார்கள் என அவள் செவி வழி செய்தி கேட்க அதையே அவள் குடும்பதிடமும் சொல்கிறாள். பத்து மாத குழந்தையை விட்டு விட்டு எப்படி செல்வாய்? உன் உடல் நிலையை கவனி என அன்புடன் அம்மாவும் மாமியாரும் சொல்ல கொஞ்சம் சோர்வாகிறாள்.

ஆனால் அவள் கணவனோ எதை செய்தால் உனக்கு மகிழ்ச்சியோ அதை செய். குழந்தையைப் பற்றி கவலைப் படாதே. அவனை நான் பார்த்துக் கொள்கிறேன். நீ உனக்கு பிடித்ததை செய் என சொல்லிக் கொண்டே அவள் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைக்கிறான்.

அவளருகே அவன் இருந்தால் அசைக்க முடியாததையும் அவள் அசைத்து விடுவாள்.

தமிழாசிரியரானாள். தன் சிறு வயது கனவு பலித்தது. மனசோர்விலிருந்து தமிழ் அவளை மெல்ல மீட்டெடுத்தது. இதோ உங்கள் முன் தமிழாசிரியராக...

சிறுகதை



# பேருந்து நிலையம்

**ப்ரியங்கா K ஹரிவேந்திரன்**

ஆசிரியை, சான் ஆண்டோனியோ தமிழ்ப்பள்ளி



அன்றொரு நாள் வழக்கம் போல் தேநீர் அருந்த ஒரு பேருந்து நிலயத்திற்கு எதிரே உள்ள ஓர் கடைக்கு சென்று தேநீர் அருந்திக்கொண்டிருந்தேன்.

மக்கள் அவர்கள் வேலையை முடித்து விட்டு களைப்புடன் பேருந்துக்காக காத்திருந்தனர். அவர்களைப் பார்த்து அவர்கள் என்ன வேலை செய்பவர்களாக இருக்கும் என்று யோசித்து கொண்டிருக்கும் வேளையில், ஒருவர் மட்டும் என் கவனத்தை மிகவும் ஈர்த்தார். அவர் ஒரு எளிய உடை அணிந்து, ஒரு பழைய கண்ணாடி அணிந்து, முடி களைந்து அந்த பணிமேடையில் மற்ற மக்களைப் போலத்தான் இருந்தார். ஆனால் என்னை ஈர்த்தது என்னவோ, அவர் கையில் இருந்த காகிதங்களும், அவர் முகபாவமும் தான். பருகிய தேநீருக்கு காசு கொடுத்துவிட்டு, எதிரே இருக்கும் பேருந்து பணிமேடைக்கு சென்று, அவர் அருகில் அமர்ந்தேன். அவர் அருகில் அமர்ந்தவுடன் புலப்பட்டது, அவர் கையில் இருப்பது வினாத்தாள் என்றும், அவர் ஒரு ஆசிரியர் என்றும்.

அவரிடம் "ஐயா , நீங்கள் ஆசிரியரா?" என்று கேட்டேன். அவரும் "ஆம்." என்று கூறி வினாத்தாளையே உற்றுப் பார்த்து யோசித்து கொண்டிருந்தார். நானும் பார்த்தேன் அந்த தாளை. அதில் உச்ச மதிப்பெண் எழுதி அதற்கு மேல் அந்த மாணவன் வாங்கிய மதிப்பெண் எழுதும் இடம் காலியாக இருந்தது . அந்த ஆசிரியர் அந்த இடத்தையே உற்று பார்த்துக்கொண்டி ருந்தார். நான் ஏதோ புரிந்தது போல அவரிடம் " ஐயா, நீங்கள் யோசிப்பதை பார்த்தால், நீங்கள் திருத்தும் வினாத்தாளை எழுதிய மாணவன் சரியாக எழுதவில்லை என்று நினைக்கிறேன்" என்றேன். அவர் சற்று ஆச்சர்யத்துடன் என்னை பார்த்து "ஆம்" என்றார். அவர் ஆம் என்றதும், அவர் நம்மிடம் பேச

> என் அருகவே மீண்டும் வந்து, ஒரு குழந்தயை போல வெட்கம் கலந்த சிரிப்புடன் ஆம் என்ற ஒரு சொல்லில் பதில் சொல்லாமல், ஒரு வாக்கியத்தை கூற, நான் வாயடைத்து நின்றேன்.

விரும்பவில்லையோ என்று நினைத்து மீண்டும் எதுவும் பேசாமல் அங்கேயே அமர்ந்து விட்டேன். அவர் மதிப்பெண் எதுவும் போடாமல்" முயற்சி திருவினையாக்கும்" என்று எழுதி அந்த தாளை தன் பையில் வைத்தார்.

சற்று நேரம் கழித்து, சிகப்பு விளக்கு கொண்டை கொண்ட வாகனம் வந்து நின்றது. அதில் இருந்து ஒருவர் இறங்க, அவர் பாதுகாவலர்கள் அவர் பக்கம் நிற்க. அந்த ஆசிரியரை நோக்கி வந்தார். வந்தவர் ஆசிரியரை பார்த்து " ஐயா, வாங்க நான் உங்களை உங்கள் வீட்டிற்கு அழைத்து செல்கிறான்" என்றார். ஆசிரியரும் கொஞ்சம் சங்கடத்துடன் அக்கம் பக்கம் பார்த்து "வேண்டாம்" என்றார் . சற்றும் யோசிக்காமல் ஆசிரியரின் பையை கையில் எடுத்து "நீங்கள் என்னுடன் தான் வருகிறீர்கள்" என்று கூறி முன்னே செல்ல ஆசிரியரும் பின்தொடர்ந்தார். ஆசிரியரை நான் நிறுத்தி " ஐயா, அவர் உங்கள் மாணவனா ?" என்று கேட்டேன். அவரும் நகைத்து "ஆம் " என்று, வாகனத்தை நோக்கி நடந்தார். இரண்டு அடி நடந்த பின் நின்றார். பின்னர் என் அருகவே மீண்டும் வந்து, ஒரு குழந்தயை போல வெட்கம் கலந்த சிரிப்புடன் ஆம் என்ற ஒரு சொல்லில் பதில் சொல்லாமல், ஒரு வாக்கியத்தை கூற, நான் வாயடைத்து நின்றேன். அவரும் திரும்பி தலைநிமிர்தபடி அந்த வாகனத்தில் ஏறி சென்றுவிட்டார் .

என்னை திகைக்க வைத்த ஆசிரியர் சொன்ன வாக்கியம்,

**"முதல் முதலில் 'முயற்சி திருவினையாக்கும்' என்று மதிப்பெண் வாங்கிய மாணவன் அவன்"**

# அட்டைப்பட ஒளியெழுத்துக் கவிதை .. புகைப்பட கலைஞர் TA . சந்திரா






# கண்ட பயணம்

**ஜோத்ஸ்னா சுவாமிநாதன்**

நிலை 4, சான் ஆண்டோனியோ தமிழ் பள்ளி

யுனிவர்சல் ஸ்டுடியோஸ் எனக்கு ஒரு அற்புதமான அனுபவம்! அந்த நேரம் மிகவும் உற்சாகமாக இருந்தது, அந்த பயணம் சோர்வாக இருந்தாலும் அது அற்புதமாகவும் இருந்தது. நாங்கள் விமானத்தில் பறந்து கொண்டிருந்தபோது, எனக்கு கீழே வெள்ளை மேகங்களைக் காண முடிந்தது, அவை பெரிய பஞ்சு துண்டுகள் போல இருந்தன.

நாங்கள் LA, கலிபோர்னியாவை அடைந்ததும், யுனிவர்சல் ஸ்டுடியோவுக்குச் செல்ல எங்களால் காத்திருக்க முடியவில்லை! மறுநாள், யுனிவர்சல் ஸ்டுடியோவுக்குக் கிளம்பினோம், நாங்கள் அருகிலுள்ள வாகன நிறுத்துமிடத்திற்குச் சென்றோம், மீதமுள்ள வழியில் நடந்தோம்.

நாங்கள் அங்கு சென்றபோது நான் மிகவும் உற்சாகமடைந்தேன், ஏனென்றால் நாங்கள் சென்ற முதல் சவாரி, எனக்கு மிகவும் பிடித்த புத்தகத் தொடரான ஹாரி பாட்டர்! அந்த சவாரி ஒரு உற்சாகமானதாக இருந்தது. நான் சுமார் 4 முறை சவாரி செய்த பிறகு, நான் தி ரிவெஞ்ச் ஆஃப் தி மம்மி என்ற சவாரிக்கு சென்றேன். இது ஹாரி பாட்டர் சவாரி போன்ற ஒரு த்ரில்லான சவாரி, ஆனால் இது பின்னோக்கி சென்றது. நான் வீடு திரும்புவதற்கு முன் சென்ற கடைசி சவாரி, ஜுராசிக் வேர்ல்ட் ரைடு. இந்தச் சவாரி வேகமாக கீழ்நோக்கிச் சரிவைக் கொண்டிருந்தது, மேலும் கீழே வந்ததும், உங்கள் முகத்திலும் உடலிலும் தண்ணீர் அடிக்கும்.



அனைத்து சவாரிகளையும் முடித்துவிட்டு, பட்டாசு வெடிப்பதைப் பார்த்து, இரவு உணவு சாப்பிட்டுவிட்டு, நாங்கள் எங்கள் ஹோட்டல் அறைக்குச் சென்று, நன்றாக ஓய்வெடுத்தோம். அடுத்த நாள் நாங்கள் மிகவும் சோர்வாக எழுந்தோம், ஆனால் LA இல் இன்னும் அற்புதமான இடங்களைப் பார்க்க நாங்கள் தயாராக இருந்தோம்.

அடுத்ததாக நாங்கள் சென்றது தி பாயிண்ட் ரெய்ஸ் லைட்ஹவுஸ். கலங்கரை விளக்கத்தை அடைய மற்றும் பார்க்க, 346 படிகள் கீழே நடக்க வேண்டும்! எங்களுக்குப் பயம் வந்துவிட்டது! ஆனால் நாங்கள் கலங்கரை விளக்கத்தை அடைந்தபோது, மிக அழகாக இருந்தது. கலங்கரை விளக்கத்திற்குப் பின்னால், ஒரு நீலக் கடல் இருந்தது, மற்றும் கலங்கரை விளக்கத்தைச் சுற்றி அற்புதமான பசுமை இருந்தது.

நாங்கள் சென்ற கடைசி ஆனால் மிகவும் கண்கவர் இடம், கோல்டன் கேட் பாலம்! பெயரில் சொன்னது போல் பொன்னிறமாக இருக்கும் என்று நினைத்தேன். அந்தக் காட்சியைக் கண்டு நான் திகைத்துப் போனேன்!

இந்த அற்புதமான இடங்களைப் பார்த்த பிறகு, நாங்கள் மிகவும் சோர்வாக இருந்தோம்! நிம்மதியாக தூங்கினோம். அடுத்த நாள் எழுந்ததும், விமான நிலையத்திற்குச் சென்று, பாஸ்போர்ட்டைச் சரிபார்த்து, எங்கள் விமானம் வரும் வரை காத்திருந்து சான் அன்டோனியோவுக்குப் பறந்து வந்தோம்!







# செல்வக் களஞ்சியங்கள்


## திருமதி.பிரியதர்சினி பார்த்தசாரதி

**கல்வி ஒருங்கிணைப்பாளர், சான் ஆண்டோனியோ தமிழ்ப்பள்ளி**


வணக்கம் மக்களே!!!

என்னோட பார்வையில் செல்வக் களஞ்சியங்கள்.

இது முழுக்க முழுக்க என்னுடைய எண்ணங்கள் மட்டுமே.

சென்ற ஆண்டு நான் பள்ளியில் ஆசிரியையாக சேரும் பொழுது மிகவும் யோசித்தேன் ஏன் என்றால் எப்படி நான்கு ஐந்து குழந்தைகளை கவனிப்பது, அவர்களுக்கு தெரியாததை கற்றுத் தர வேண்டும், அனுசரணையாக இருக்க வேண்டும், சந்தேகங்களை தீர்க்க வேண்டும் இப்படி பல 'வேண்டும்' என்னுள். இவற்றில் உள்ள எல்லாவற்றையும் செய்ய முடியுமா என்ற தயக்கம்தான்!!!



இவ்வளவு தயக்கத்திற்கான காரணம் என்னவென்றால் முன் பின் ஆசிரியர் பணி செய்தது கிடையாது, ஒரே சமயத்தில் நான்கு ஐந்து குழந்தைகளை கையாண்டது கிடையாது, அதனாலே!!!!

இவை எல்லாவற்றையும் தாண்டி அவர்கள் செய்யும் சிறு பிழைகளையும் பொறுத்து மன்னிக்கும் மனப்பக்குவம் வேண்டும். அது சாதாரண விஷயம் அல்ல. நானும் எனது தோழிகளும் கல்லூரி படிக்கும்போது ஆசிரியர்களை போட்டு வதைத்து இருக்கிறோம் (அது ஒரு கனாக்காலம் சரி நம் கதைக்கு வருவோம் என்ன தான் சொல்ல வருகிறேன் என்று பார்ப்போம்).

ஆரம்பத்தில் அனைத்தும் தடுமாற்றமே எனக்கு தமிழ் பள்ளியில். தடுமாற்றம் என்பது மனிதனின் இயல்பு அதை மிகவும் பொறுமையாக கையாள வேண்டும். என்னுடைய தடுமாற்றத்திற்கு அளவுகோலே கிடையாது முதல் நாள் பள்ளி, முதல் பத்தாம் வகுப்பு தேர்வு, 12ம் வகுப்பு தேர்வு பழகிவிட்டேன், அப்பா அம்மாவை பிரிந்த முதல் நாள் இப்படி எண்ணிலடங்கா தடுமாற்றங்கள்.

தடுமாற்றமும் தயக்கமும் இல்லாத மனிதர்கள் தான் உலகின் சக்தி வாய்ந்த மனிதர்களாக நான் பார்க்கிறேன். அதாவது சக்திமான், ஸ்பைடர் மேன், அயன் மேன் அல்லது கத்தி, துப்பாக்கி வைத்து சண்டை போடுபவர்களோ கிடையாது கிடையாது. ஒரு மனிதனின் சக்தி என்பது ஒரு செயலை செய்யும் நேரத்தில் எந்த ஒரு தடுமாற்றமும் தயக்கமும் இல்லாமல் செய்து முடிப்பவரே சக்தி வாய்ந்தவர்கள்

உதாரணத்திற்கு நம் தாய் நாட்டை ஆளும் பிரதமர் மற்றும் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் அமெரிக்க நாட்டின் குடியரசுத் தலைவராகட்டும், கூகுள் நிறுவனத்தின் முதன்மை செயலாளர் இவர்கள் எல்லாம் தான், இவர்கள்



மட்டுமல்ல தடுமாற்றமும் தயக்கமும் இல்லாமல் நடத்தி முடிக்கக்கூடிய எல்லோரும் சக்திவாய்ந்த மனிதர்கள் தான் அது என் அப்பாவாகவும் இருக்கலாம், என் மகனாகவும் இருக்கலாம், கணவனாகவும் இருக்கலாம் இல்லை படித்துக் கொண்டிருக்கும் உங்களின் அப்பா மற்றும் கணவனாகவும் இருக்கலாம்.

**என்ன சொல்ல வருகிறேன் என்றால்?**

ஒரு பள்ளியின் சாராம்சமே குழந்தைகளை எதிர்காலத்தில் எப்படி தொடர்ந்து வாழ வேண்டும் என்ற யுத்தியை கற்றுக் கொடுப்பதும், எப்படி தோல்விகளை சந்திக்க வேண்டும் என்பதும், பிறர் தவறு செய்தால் அதை எப்படி மன்னிப்பது போன்ற விஷயங்களை கற்றுத் தர வேண்டும்.

பள்ளிக்கூடம் என்பது ஒரு வழியில் மட்டுமே கற்றுக் கொள்ளக்கூடிய இடம் அல்ல, அதாவது ஆசிரியர் மட்டுமே மாணவர்களுக்கு சொல்லித் தரும் இடம் அல்ல. ஆசிரியரிடமிருந்து மாணவர்களும் மாணவர்களிடமிருந்து ஆசிரியர்களும், மற்ற மாணவர்களிடமிருந்து இதர மாணவர்களும் கற்றுக் கொள்ளக்கூடிய இடம். பள்ளிக்கூடத்தில் மட்டுமே இவ்வகையான பரிமாற்றங்கள் இருக்கும்.

சென்ற வருடம் நான் ஆசிரியராக இருக்கும்போது நான் பல விஷயங்களை என் வகுப்பு பிள்ளைகளிடமிருந்து கற்றுக் கொண்டேன், என் வகுப்பு மாணவர்கள் பெயரை சொல்வதில் நான் பெருமைப்படுகிறேன் கௌஷிக், ஸ்ரீலு, ரித்துல், சுகந்த், விவிக்தா, ஸ்டீபன், ராகுல். ஒவ்வொரு குழந்தையும் செல்வங்கள் தான், இந்த செல்வங்களை எல்லாம் செல்வம் செல்வக்களஞ்சியங்களாக மாற்ற ஆசிரியரான நம் கையில் தான் உள்ளது.

வாரத்தில் ஒரு நாள் மட்டுமே மாணவர்கள் தமிழ் பள்ளி வருகிறார்கள் இதில் எப்படி இதை நாம் சாதிப்பது?

இங்கு தான் பெற்றோர்கள் அவர்களின் பணியோடு சேர்த்து ஆசிரியர் பணியையும் சேர்த்து செய்ய வேண்டும்.

நம் தமிழ் பள்ளி மாணவர்களுக்கு அவர்களுடைய தடைகளையும் தயக்கத்தையும் தகர்த்தெறிய நிறைய வழிகள் செய்து கொடுத்திருக்கிறார்கள். தனிப்பட்ட மாணவரின் திறமை நிகழ்ச்சி, நாடகப் போட்டி, வகுப்பில் பிற மாணவர்களுடன் கலந்துரையாடல், புது சொற்களின் பரிமாற்றம்.

ஆகவே பெற்றோராகவும், ஆசிரியராகவும் நம் மாணவச் செல்வங்களை செல்வக்களஞ்சியங்களாக மாறுவது நாம் அவர்களுக்கு உறுதுணையாக இருப்போம், அவர்கள் வாழ்க்கையில் நிச்சயம் அவர்கள் முன்னேறுவார்கள், சாதிப்பார்கள்.

**சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா**

**செல்வக்களஞ்சியமே!!!!**



பூர்ணிமா குப்புசாமி

ஆசிரியை, சான் ஆண்டோனியோ தமிழ்ப்பள்ளி

# எளிமையும், விடாமுயற்சியும்

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2023 - இல், உலக நாடுகள் அனைத்தையும், இந்தியாவை திரும்பிப் பார்க்க வைத்த சரித்திர நிகழ்வு சந்திரயான் - 3. நமது இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஏவுத்தளத்திலிருந்து சந்திரயான்-3 விண்கலத்தை ஜூலை 14, 2023 அன்று வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது. இஸ்ரோ வின், வெற்றிகரமான செயற்பாடுகளுக்கு மற்றுமொரு படிக்கல்லாக, அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனாவை அடுத்து நிலவில் கால்பதித்த நான்காவது நாடு என்றும், நிலவில் இதுவரை எந்த நாடும் கால்படிக்காத தென் துருவ பகுதிக்கு, விண்கலத்தை செலுத்தி வெற்றிகரமாக தரையிறக்கிய முதல் நாடு இந்தியா என்ற பெருமையையும் பெற்றது. “இது ஒரு வரலாற்றுத் தருணம் என்றும், இஸ்ரோ பல ஆண்டுகளாக இந்த தருணத்திற்காக தனது கடின உழைப்பையும், விடாமுயற்சியையும் அர்ப்பணித்துள்ளது” என்று இந்தியப் பிரதமர் பாராட்டினார்.



பல உலக நாடுகள் விண்வெளியில் சாதனை நிகழ்த்திக் கொண்டிருக்க, இந்தியாவின் இந்த வெற்றி எப்படி இந்த அளவுக்குப் பேசப்படுகிறது என்று தோன்றலாம். சில வளர்ந்த நாடுகள், தங்களின் ஒரு அறிவியல் புனைகதை திரைப்படத்திற்கு ஏற்கும் செலவு பட்டியலை விட நமது சந்திரயான் செயல் திட்டத்தின் மொத்த செலவு பட்டியல் சற்று குறைவே ஆகும். வளர்ந்து வரும் நாடான நமது இந்தியாவின் பொருளாதாரத்தை மனதிற்கொண்டு இஸ்ரோ திட்டக்குழு, விண்கலத்திலிருந்து பிரிந்து செல்லும் டெபிரிஸ் (debris) என்று சொல்லப்படும் விண்வெளி கழிவுகளையும் வீணாக்காமல், அதில் சில அறிவியல் உபகரணங்கள் பொறுத்தி, அதில் கவிதை (POEM-3) எழுதினார்கள். வியப்பாக இருக்கிறதா ? அதாவது, PSLV சுற்றுபாதை இயங்குதள பரிசோதனை தொகுதி(PSLV Orbital platform Experiment Module),




என்று சொல்லப்படும் இந்த இயந்திரங்களை உருவாக்குவதற்கு, இந்தியாவில் புதிதாக தொடங்கிய (START-UP) நிறுவனங்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது.

சந்திரயான் 3-யின் வெற்றியை உலகமே நேரலையில் கண்டு மகிழ்ந்தது. உலகில் உள்ள அத்துணை இடங்களிலும் இருக்கும் ஒவ்வொரு இந்தியரும் கொண்டாடிய நிமிடங்களாக இருந்தது. உலகையே வியப்பில் ஆழ்த்திய, இந்த சிறப்பு தருணத்தின் நாயகர்களான சந்திரயான் செயல்பாட்டுக் குழுவினர், இந்த வெற்றியை கைகளை தட்டியும், ஆனந்த கண்ணீருடனும் கொண்டாடியது, ஏனோ நேரடி காணொளியில் பார்த்துக் கொண்டிருந்த நமக்கும் கண்ணீரை வரவைத்தது உண்மை.

அடுத்த, சில நாட்களுக்கு வானில் நிலவை பார்க்கும்போதெல்லாம், நம் பிள்ளைகளிடம், "அதோ, அங்கே தான் நம் இந்தியாவின் சந்திரயான் இருக்கிறது, பார்!" என்று பெருமைப்பட்டுக் கொண்ட பெற்றோராகவும், "நீயும் பெரியவனானால், இஸ்ரோவில் பணியாற்ற வேண்டும்" என்று ஊக்குவித்த வண்ணமும் இருந்தோம் என்றால் மிகையாகாது.

இந்த விடாமுயற்சியின் வெற்றியை நம் பிள்ளைகளுக்கு தினமும் நினைவூட்டுவோம்.

பூமியிலிருந்து சுமார் 365,351 கிமீ தொலைவில் இருக்கும் நிலவிற்கு வெற்றிகரமாக விண்கலத்தை செலுத்திய, தருணத்தை கொண்டாடிக் கொண்டிருந்த அதே நேரத்தில், வெறும் 5 செமீ அளவே உள்ள ஒரு சதுரத்திலிருந்து அடுத்த சதுரத்திற்கு காய்களை நகர்த்தி விளையாடும், சதுரங்க போட்டியில், இந்திய சதுரங்க வரலாற்றில் ஒரு புகழ்ப் பெற்ற அத்தியாயத்தை எழுதிக்கொண்டிருந்தார், நம் இந்திய வீரர், பிரக்ஞானந்தா ரமேஷ்பாபு. 18 வயது நிரம்பிய பிரக்ஞானந்தா, செஸ் உலகக் கோப்பை இறுதிப் போட்டியில், உலகின் நம்பர் 1 சதுரங்க வீரர், மேக்னஸ் கார்ல்சனை எதிர்த்துப் போட்டியிட்டார். சர்வதேச செஸ் கூட்டமைப்பு (FIDE) சார்பாக ஆகஸ்ட் 24, 2023 - இல் நடத்தப்பட்ட சதுரங்கப் போட்டியின் இறுதிப் போட்டியில், சமநிலை உடைப்பு (Tie-break) என்ற நிலையில், இரண்டாம் இடத்தைப் பெற்றார். இந்திய அளவில், திரு. விஸ்வநாதன் ஆனந்திற்குப் பிறகு, உலக அளவில் பழம் பெரும் பாபி பிஷர் மற்றும் கார்ல்சனுக்குப் பிறகு, FIDE போட்டிக்கு தகுதிப் பெற்ற இளம் வீரர் இவர்.

இந்த உலகின் தலைசிறந்த செஸ் வீரரின், வலுவான ஆதரவாளராக இருப்பவர், அவரது அம்மா, நாகலட்சுமி அவர்கள். கைபேசியில் உள்ள புகைப்படக் கருவியுடனே வாழும் சமூகத்திற்கு நடுவே, பகட்டு இல்லாத எளிமையான தோற்றம் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

உலகக் கோப்பைப் போட்டி முழுவதும் அவர் பிரக்ஞானந்தா உடனே இருந்தார். போட்டி எங்கு நடைபெற்றாலும், தன் கையாலேயே சமைத்துக் கொடுத்தார். அதற்கு தேவையான அனைத்தையும் தன்னுடனே கொண்டு செல்கிறார். போட்டி ஆரம்பித்தது முதல் முடியும் வரை, அவரது ஆட்டத்தின் ஒவ்வொரு சதுரங்க நகர்விலும் முழு கவனம் செலுத்தினார். மகனின் கைபேசியை கையில் பிடித்துக் கொண்டு, போட்டி முடிந்து வெற்றியுடன் வரும் பிரக்ஞானந்தா ஊடகங்களுக்கு அளிக்கும் பேட்டியை, ஒரு பக்கமாக நின்று முகம் மலர பார்த்துக் கொண்டிருந்தார். இந்த காட்சி சமுக ஊடகங்களில் வெளியிடப்பட்டு பிரபலமானது. பிரக்ஞானந்தாவை பற்றி பேசிய அனைத்து ஊடகங்களும், செய்திகளும், அவரது அம்மாவையும் பற்றி பேச தவறவில்லை. அவருக்கே தெரியாமல் செய்தி தலைப்பாகிப் போனார் நாகலட்சுமி அவர்கள்.

முகத்தில் ஒப்பனையோ, உதட்டுச்சாயமோ இல்லை. அவளின் பண்பட்ட வளர்ப்பாலும், எளிமையான வாழ்க்கை முறையாலும், தனது இரண்டு பிள்ளைகளையும், சதுரங்க வீரர்களாக்கிய பெருமை மிக்க தாயின் முகம் நம் மனத்தை விட்டு அகலாமல், என்றும் நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

கூடுதல் தகவலாக, பிரக்ஞானந்தாவின் சகோதரி செல்வி. வைஷாலியும் இந்தியாவின் மூன்றாவது பெண் கிராண்ட்மாஸ்டர் ஆவார். மேலும், முதல் சகோதர சகோதரி ஜோடியாக போட்டியில் பங்கேற்கதகுதிப்பெற்று, சரித்திரம் படைத்துள்ளார்கள். இவர்கள் இருவரின் வெற்றிகளால், வார்த்தைகளால் கூட பேச முடியாத ஒரு பெற்றோரின் உணர்வுகளை அவளின் புன்னகை வெளிப்படுத்துகிறது.



சுகன்யா மணிகண்டன்
ஆசிரியை, சான் ஆண்டோனியோ தமிழ்ப்பள்ளி

# வேடிக்கை மனிதர்கள்



அவள்/அவனை விட
நான் தகுதியானவன்.
எனக்கே அது இன்னும் கிடைக்கல.
அவங்களுக்கு எப்படி அது கிடைக்கலாம்?

உழைப்பெல்லாம் ஒன்னும் இல்ல.
எல்லாம் வெறும் அதிர்ஷ்டம் தான்.

எனக்கு முன்னாடியே தெரியும்.
அவங்க ஆடுன ஆட்டத்துக்கு
இப்படித்தான் ஆகும் னு

அவங்கள விட நல்லா சம்பாதிக்கணும்.
அவங்க முன்னாடியே வாழ்ந்து காட்டணும்.

அவனுக்கு என்ன வெளிநாட்டுக் காசு
மெதப்புல என்ன பண்றதுன்னு புரியாம ஆடுறான்.

கார் வாங்கட்டும் வீடு வாங்கட்டும்
மேல போனா கீழ வந்து தான ஆகனும்.

அவனுக்கு ரெண்டு சம்பளம்
பொண்டாட்டியையும் வேலைக்கு அனுப்பறான்
ஜம்பமா பொழக்கிறான்

இன்னும் பல பல....

இப்படியெல்லாம் நீங்க யோசிச்சிருகீங்களா?

என்னைக்கு நம்ம வாழ்க்கைய
நாம வாழாம,
நம்ம வாழ்க்கைல இன்னொருத்தர இழுத்து
அவுங்க கூட நாம போட்டி போடுறோமோ – அப்போவே,
இந்த வேடிக்கை உலகில்
நாம் வேடிக்கை மனிதர்கள் ஆகிறோம்.

யார்படும் துன்பம் யாருக்கிங்கே புரியும்?
இன்று மட்டுமே நிச்சயம்
நாளை என்ன யாரறிவார்?
மனதாலும் யாருக்கும்
தீங்கு நினைக்கா வாழ்வை
வாழ்ந்துவிட்டு தான் போவோமே....





# மண்ணின் பெருமை

## ஜெய் பிரதீஷ், ஆரம்பநிலை 5B



வணக்கம் நான் ஜெய் பிரதீஷ். நான் இன்றைக்கு பேச போகும் தலைப்பு எனது மாவட்டத்தை பற்றி. எனது மாவட்டம் பெங்களூரில் இருந்து இரண்டு மணி நேரத்திலும் சேலத்திற்கு மிக அருகிலும் இருக்கும் தகடூர் என்னும் தர்மபுரி. பண்டைய காலத்தில் சோழர்களும் பல்லவ மன்னர்களும் ஆண்ட இடமாகும் .

எங்கள் மாவட்டம் கடையேழு வள்ளல்களில் ஒருவரான அதியமான் நெடுஞ்சி என்னும் மன்னன் ஆண்ட மாவட்டம். அது ஏன் எங்கள் மன்னனுக்கு கடையேழு வள்ளல் என்று பெயர் பெற காரணம் என்று தெரிய வேண்டுமா? அன்றைய காலகட்டத்தில் மிகவும் சக்தி வாய்ந்த மற்றும் மிக அரிய வகையான நெல்லிக்கனியை அவ்வையாருக்கு கொடுத்ததே காரணம்.

எங்கள் ஊரில் மற்றொரு சிறப்பு கோட்டை கோவில் என்று அழைக்கப்படும் மல்லிகார்ஜனேஸ்வரர் கோவில். மேலே நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும் புகைப்படம் கோட்டை கோவிலின் முக்கிய அம்சங்களில் ஒன்று 2.5 டன் எடையுள்ள இரண்டு தொங்கும் தூண்கள்! இந்த அற்புதமான தூண்கள் இந்த கோவிலின் 'கர்ப கிரிஹா' (சன்னதி) க்கு அடுத்துள்ள அர்த்த மண்டபத்தில் அமைந்துள்ளன. அடிவாரத்திற்கும் தூணுக்கும் இடையில் 2 செமீ இடைவெளியை பக்தர்கள் தெளிவாகக் காணலாம்!

அதியமான் மன்னனை தாண்டி பேச வேண்டிய தலைப்பு எங்கள் ஊரில் இருக்கும் ஒகேனக்கல் அருவி. ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி பெரும்பாலும் 'இந்தியாவின் நயாகரா நீர்வீழ்ச்சி' என்று அழைக்கப்படுகிறது. சங்ககால இலக்கியங்களான புறநானூறு அகநானூறு குறுந்தொகையில் ஒகேனக்கல் அருவியை பற்றி பல புலவர்கள் பாடியிருக்கிறார்கள்.

மரம் வளர்ப்போம் காட்டை காப்போம் என்ற கூற்றுக்கிணங்க எங்கள் குடும்பமும் எங்கள் ஊரில் உள்ள பல குடும்பங்களும் பல தென்னை மரங்களும், தேக்கு மரங்களும் மட்டுமல்லாது பல வகை மரங்களுமான கொய்யா மரம், மாமரம் போன்ற மரங்களை நட்டு வருகிறார்கள்.

நன்றி பிரியா ஆன்ட்டி , திறமைக்கான நிகழ்ச்சியில் எங்களது மாவட்டத்தை பற்றி பேச சந்தர்ப்பம் அமைத்துக் கொடுத்ததற்கு, அதுவே என்னை இப்படி ஒரு கட்டுரையை எழுத உந்தியது.



# பொய்யின் வலிமை.. அம்மாவிடம்




கார்த்திகேயன் இராசிபாளையம் துரைராஜ்

ஆசிரியர், சான் ஆண்டோனியோ தமிழ்ப்பள்ளி


தவறிய மொழிகள் எல்லாம்
தத்தை மொழி என்று
ரசித்திட்ட உன்னிடம்
தலைகனம் பிடித்து
தாத்தா பாட்டியின் அடைக்கலத்தோடு
உன்னை வென்றிட சொன்ன பொய்கள் ஆயிரம் ..

அப்பாவின் சட்டைப்பையில்
பேனா வாங்க திருடிய இருபது ரூபாய்க்கு
கீழே கிடந்த பணம் என்று காரணம் சொல்லி
உன்னை ஏமாற்றிட சொன்ன பொய்கள் ஆயிரம் ..

ஒவ்வொரு தேர்வின் முடிவில்
தேடி வரும் சிறு பிள்ளை போல
ஓடி வந்து என் வளர்ச்சி அட்டையில்
என் பெயரில் முதல்மதிப்பெண்
வந்ததா என்று பார்க்கும் போது
வாடி திரும்பும் கடலலைகள் போல்
வருத்தம் கொண்டு கோவம் கொள்வாய் ..
ஒப்பற்ற ஆசிரியர்களை குற்றவாளிகளாக்கி
ஓரவஞ்சனையால் மதிப்பெண்கள் வழங்கப்பட்டது என
ஒரு துளியும் கூச்சமில்லாம சொன்ன பொய்கள் ஆயிரம்..

பள்ளிவாழ்வின் இறுதி பயணத்தில்
இலக்கை எட்டவிருக்கும் தருவாயில்
பெரிய கிணற்றில் புதிதாக கற்ற நீச்சல்
ஆர்வம் தினமும் தூண்ட
பொது தேர்விற்கு படிக்க விடப்பட்ட விடுமுறையில் கூட
படிப்பை மறந்து நீச்சல் குதித்த நாட்களில்
கிணற்றுக்கு போக உன்னிடம் சொன்ன பொய்கள் ஆயிரம்..

சொல்லிய பொய்கள் யாவும்
உண்மைக்கு
ஒருதுளியும் நெருக்கமில்லாமல் இருக்கவில்லையென்றாலும்
உன்னை நம்ப வைத்து
உன்னை பலநேரங்களில் வென்றிட்ட எனக்கு
இன்றுவரை ஒரு பொய்யில் உன்னை வெல்லவே
முடியவில்லை..

"சாப்பிட்டாச்சா?" சாப்பிட்டுவிட்டேன் அம்மா"



# நன்றியுரை

"என்று பிறந்தவள் என்றுரையாத சிறப்புடைவள்"

ஆம்! ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாய்ப் பூண்டு இவ்வுலகிலுள்ள

மொழிகளுக்கெல்லாம் மூத்தவளாகத் திகழும் நம் தமிழ் அன்னைக்கு நன்றி கலந்த வணக்கங்களுடன் எனது நன்றியுரையைச் சமர்ப்பிக்கின்றேன்.

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்ற வள்ளுவரின் வாக்கைக் குறிக்கோளாகக்

கொண்டு பாரினில் தமிழைப் பறைசாற்ற நம் பிள்ளைகளுக்காகத் தொடங்கிய சான் ஆண்டோனியோ தமிழ்ப் பள்ளி என்னும் விருட்சத்தின் வேர்களாகிய நம் நிர்வாக குழுவினர்களுக்கு எம் மனமார்ந்த நன்றிகள்!

இவ்வாண்டு வெற்றிகரமான கல்வி ஆண்டாக அமைய , எமது கடமைகளும் பணிகளும் சிறப்பாக அமைய வழி நடத்திய பள்ளியின் தலைவர் அவர்களுக்கும்,தமிழ் பள்ளியை உயர்த்திட வேண்டுமென்ற உயரிய ஒற்றை எண்ணம் கொண்டு இணைந்து உழைத்திட முதல்வர் மற்றும் கல்விக்குழு ஒருங்கிணைப்பாளர் அவர்களுக்கும்,கூகுள் வகுப்பு மற்றும் அனைத்து தொழில்நுட்ப கோளாறுகளையும் சரிசெய்யும் தொழில்நுட்ப குழுவினர்களுக்கும் , ஆலோசனைகள் பல வழங்கி அங்கிகார புதுப்பித்தல் பணியில் இணைந்து உதவிய நிர்வாகிகள், முன்னாள் முதல்வர்,மற்றும் முன்னாள் துணை முதல்வர் அவர்களுக்கும்,ஒவ்வொரு வாரமும் வகுப்புகள் செவ்வனே நடைபெற வளாக ஏற்பாடு, பராமரிப்பு மற்றும் மாணவர் பாதுகாப்பு ஆகியவற்றை பொறுப்புடன் செயல்படுத்தும் தன்னார்வலர்களுக்கும் எம் இதயப்பூர்வமான நன்றிகள்!

"உயிரின்றி அமையாது மெய்", என்ற வாக்கிற்கேற்ப தங்கள் பொன்னான நேரத்தைத் தமிழுக்காகவும் நம் பிள்ளைகளுக்காகவும் அர்பணித்துச் சேவை செய்து இப்பள்ளியின் உயிராய் விளங்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் எம் இதயங்கனிந்த நன்றி மற்றும் வாழ்த்துக்கள்! இப்பள்ளியின் வெற்றிக்கு உச்சபங்குதாரர்களாக ஆதரவு தரும் மாணவச் செல்வங்கள் மற்றும் பெற்றோர்களுக்கும் எமது நன்றியை பகிர்ந்து கொள்கிறோம்!

இறுதியாக, இவ்வாண்டின் அனைத்து நிகழ்வுகளையும் ஒருங்கிணைத்து நம் பள்ளி குழந்தைகள் மற்றும் ஆசிரியர்களின் கதைகள், கட்டுரைகளுக்கு பல வண்ணமிட்டும், படைப்புகளுக்கு அழகான பல அற்புதங்கள் நிகழ்த்தியும், சிறப்பான பல நற்பணிகளைப் பதிந்தும், கோப்புகள் பல இணைத்தும் 2023-24 ஆம் ஆண்டின் ஆண்டு மலர் மணம் கமழ உதவிய ஆண்டு மலர் ஆசிரியர் குழுவிலுள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் எம் உளமார்ந்த நன்றி மற்றும் பாராட்டுகள்!! நம் பள்ளியின் பணிகளையும் சாதனைகளையும் உலகிற்கு பறை சாற்றும் இப்பணி ஒவ்வொரு ஆண்டும் தொடர எமது வாழ்த்துக்கள்!!!

நன்றியுடன்,

**திருமதி. த. சங்கீதா தேவி**

துணை முதல்வர்

சான் ஆண்டோனியோ தமிழ்ப் பள்ளி

# அரும்புகளின் கைவண்ணம்






நிரஞ்சனா கௌரிசங்கர்






விசாகன் திருமலை






ஹரிஷ் ஜெயராம் குமார்

# மாணவர் சாதனை விருது
# 2023–2024

இத்தமிழ் பள்ளியில் இத்துனை வருடம் பயணித்த செங்கதிர்களே!
தமிழ் படிக்க படிக்க இனிக்கும் என்பதற்கு உதாரணம் நீங்கள்!
சாதிக்கப் பிறந்த உங்களின் ஒவ்வொரு நிலையிலும் உங்களோடு
பயணித்ததில் தமிழ்ப் பள்ளி பெருமை கொள்கிறது.
நீர் எங்கு சென்றாலும்
தமிழ் உங்களை வளர்க்கட்டும்!
தமிழ் உங்களை அணைக்கட்டும்!



செல்வி. பவ்யா யோகேஷ் கண்ணன் நித்யா



செல்வி. கீர்த்தனா விமலாதித்தன்



செல்வன். நிதுளன் சிவகுமார்



செல்வி. சாதனா சிவசக்தி



செல்வி. சிவகாமி சுப்பிரமணி



செல்வன். விஷ்ணு கண்ணன்

# தன்னார்வலர்கள்

**தாமாக முன்வந்து, தன்னிகரற்ற சேவை செய்து**
**தயக்கமின்றி, விடுமுறை வேலையில் உறக்கமின்றி**
**தன் உத்வேகத்தில், தமிழை இறுகப்பற்றி!**
**தாய் தமிழை அடுத்த தலைமுறைக்கு கடத்த**
**ஊற்றென ஓடிவந்து, ஓயாமல் பாடுபடும்**
**ஒவ்வொரு தன்னார்வலர்களையும் தலைவணங்குகிறோம் !**



திரு. கார்த்திக் பாஸ்கரன்



திரு. சிவகுமார் வீரமணி



திரு. கோமதி நாயகம் பழநி



திரு. சரவணன் சந்திரமோகன்



திரு. இராமச்சந்திரன் செல்வராஜ்



திரு. மோகன் வாசு



திரு. சீனிவாசன் செல்வராஜ்



திரு. மைக்கில் ஏட்டுகூறி



திரு. காளிச்சரண் சுந்தரம்

# தொழில்நுட்ப குழு

தொடங்கியது முதல், அல்ல அல்ல தொடக்கத்திற்கு முன்பே, பள்ளி தொடங்குவதற்கு முன்பே, பள்ளியின் முன்னிலையில் அல்லாமல், எவ்வித பயனும் இல்லாமல், முகம்கூட காட்டாமல், எம்பக்கமாய் எம்முடன் இணைந்து, நுட்பமாக பல தொழில்நுட்பங்களை கையாண்டு தொன்றுதொட்டு, தொல்லை என நினைக்காமல் கேட்டமாத்திரத்தில் தொடர்பில் வந்து தொடர்ந்து உதவி செய்யும் தொழில்நுட்ப குழுவை இங்கே அறிமுகம் செய்வதில் பெரும்மகிழ்ச்சி அடைகிறோம்.



திரு. தினேஷ் குமார் ராமராஜ்



திரு. பாலாஜி பாலகுருமூர்த்தி

# மாற்று ஆசிரியர்கள்



திருமதி. அனு சரண்



செல்வி.ஸ்ருதி சதீஷ்



திருமதி. காந்திமதி பாலமுருகன்



திருமதி. கிருஷ்ணமாரி முருகசாமி

# ஆசிரியர்கள் குழு

**"வேரின்றி மரமில்லை"** என்பது போல ஆசிரியர்களின்றி எங்கள் தமிழ்ப் பள்ளி இல்லை. அள்ள அள்ள குறையாத தமிழை வாரிக் கொடுக்கும் எங்கள் கொடை வள்ளல்கள் இவர்கள். எங்களின் அத்துனை படிகளிலும் துணை நிற்கும் எங்களின் ஆசிரிய பெருமக்களுக்கு கோடான கோடி நன்றிகள்!



திரு. கார்த்திகேயன் இராசிபாளையம் துரைராஜ்



திரு.பா.குமாரசாமி



திருமதி. ஆர்த்தி சத்தியமூர்த்தி



திருமதி. அபிராமவல்லி ராமகிருஷ்ணன்



திருமதி. அஸ்வினி சம்பத்



திருமதி.பானுப்பிரியா வேலாயுதம் மணியம்



திருமதி. பியூலா கிரேஸ் கோபி



திருமதி.கங்கா லட்சுமணசாமி



திருமதி. காயத்ரி ராமமூர்த்தி



திருமதி. கீதா ராமகிருஷ்ணன்



திருமதி.ஜனனி ரத்தினவேலு



திருமதி. கோமலதா தெய்வசிகாமணி



திருமதி. லக்ஷ்மி ஸ்ரீ
சிவராம் பொன்னழகி



திருமதி.லாவண்யா
குழந்தைவேல்சாமி



திருமதி.லாவண்யா
ராஜ்மோகன்



திருமதி.மோனிகா
ஸ்ரீ ஈஸ்வர்ரய்யா



திருமதி. நிவேதா
வெங்கடேசன்



திருமதி. பூர்ணிமா
குப்புசாமி



திருமதி.பிரியா
கிருஷ்ணகுமார்



திருமதி.
பிரியதர்ஷினி சங்கர்



திருமதி.ப்ரியங்கா
குமார்



திருமதி.ரம்யா சாந்த
குமார்



திருமதி.சாந்தி
சரவணன்



திருமதி. சாரதா தேவி
கோலப்பன்



திருமதி. சத்யா ராஜேந்திரன்



திருமதி. சிவ அபிராமி குமார்



திருமதி. சோனா மனோகரன்



திருமதி. ஸ்ரீபிரியா கிரிதரன்



திருமதி.சுகன்யா வெங்கடேசன்



திருமதி.சூர்யா கிருஷ்ணமூர்த்தி



திருமதி.உஷா தங்கவேல்



திருமதி. வசந்தபிரியா குருமூர்த்தி



திருமதி.வசந்தபிரியா உதயகுமார்



திருமதி.யாமினி ஜானகிராமன்

# போட்டி வெற்றியாளர்கள்

| கதை சொல்லும் போட்டி | |
|---|---|
| **முன்மழலை** | |
| முதல் பரிசு | நிரஞ்சனா கௌரிசங்கர் |
| இரண்டாம் பரிசு | ஹரிஷ்ஜெயராம் குமார் |
| மூன்றாம் பரிசு | சஞ்சீவ் விஸ்வநாதன் |
| **மழலை** | |
| முதல் பரிசு | மகிழினி தேன்மொழி குமரன் |
| இரண்டாம் பரிசு | கிருஷ்வி குமார், ஹேமேந்ர சாய் சகீ |
| மூன்றாம் பரிசு | சேயோன் துரை இராசிபாளையம் கார்த்திகேயன் |
| **பேச்சுப் போட்டி** | |
| **Elementary 1** | |
| முதல் பரிசு | பிரவீணா சீனிவாசன், ரிஹான் பர்வீஸ் |
| இரண்டாம் பரிசு | ஹர்ஷினி கோலப்பன், அஞ்சனா ராஜவேல், சாஷினி அருள் பிரகாஷ் காயத்ரி, சாதனா ஆனந்த் |
| மூன்றாம் பரிசு | அல்ஹனா ஆசாத், ஆத்விக் முருகேசன் பார்த்தசாரதி, மிதுனிகா தினேஷ் குமார் |
| **Elementary 2** | |
| முதல் பரிசு | ஹர்ஷந்த் ராஜீவ் |
| இரண்டாம் பரிசு | மேக்னா சாய் மதன்குமார் |
| மூன்றாம் பரிசு | யாழினி விஸ்வநாதன் |
| **Elementary 3** | |
| முதல் பரிசு | ரித்திஷ் பன்னீர்செல்வம் |
| இரண்டாம் பரிசு | மான்யா பாலகுருசாமி, லக்ஷா ராஜாகார்த்திகேயன் |
| மூன்றாம் பரிசு | பர்வேஷ் சிவபாலன் |
| **Elementary 4** | |
| முதல் பரிசு | ஜோத்ஸ்னா சுவாமிநாதன் |
| இரண்டாம் பரிசு | கிருஷன் கிரிராஜ், சிகரா பிரவீன் |
| மூன்றாம் பரிசு | தனிஷ்கா மகேந்திரன் |
| **Elementary 5** | |
| முதல் பரிசு | கனிஷ்கா நெல்லாம் நாகராஜன் |
| இரண்டாம் பரிசு | காவ்யா தேன்மொழி குமரன், கௌஷிக் ரங்கேஷ் |
| மூன்றாம் பரிசு | ஸஷ்வத் ராமச்சந்திரன் |
| **Intermediate I1A** | |
| முதல் பரிசு | கீத்திகா இரத்தினகுமார் |
| இரண்டாம் பரிசு | காஷ்வி குமார் |
| **Intermediate I1 B** | |
| முதல் பரிசு | சுவாதி கௌரிசங்கர், கீர்த்தனா ராஜேஷ் |
| இரண்டாம் பரிசு | ஜீவஸ்ரீ கஜேந்திரன் |

| Intermediate I1 C | |
|---|---|
| முதல் பரிசு | சாதனா சிவசக்தி |
| **கட்டுரைப் போட்டி** | |
| **Intermediate E4** | |
| முதல் பரிசு | ஜோத்ஸ்னா சுவாமிநாதன் |
| இரண்டாம் பரிசு | கிருஷன் கிரிராஜ் |
| **Intermediate E 5** | |
| முதல் பரிசு | கனிஷ்கா நெல்லாம் நாகராஜன் |
| இரண்டாம் பரிசு | கௌஷிக் ரங்கேஷ் |
| **Intermediate I1 A** | |
| முதல் பரிசு | கீத்திகா இரத்தினகுமார் |
| இரண்டாம் பரிசு | காஷ்வி குமார் |
| **Intermediate I1 B** | |
| முதல் பரிசு | கீர்த்தனா ராஜேஷ் |
| **ஆவண போட்டி** | |
| முதல் பரிசு | ஜீவஸ்ரீ கஜேந்திரன், சம்யுக்தா பூபதி |
| இரண்டாம் பரிசு | சாதனா சிவசக்தி |
| மூன்றாம் பரிசு | கீர்த்தனா ராஜேஷ் |
| **நாடகப் போட்டி** | |
| முதல் பரிசு - சொக்கனின் திருவிளையாடல் | கீர்த்தனா ராஜேஷ், சுவாதி கௌரிசங்கர், கௌஷிக் ரங்கேஷ், தீஷிதன் ரங்கேஷ், கனிஷ்கா நெல்லாம் நாகராஜன், நிரஞ்சனா கௌரிசங்கர் |
| இரண்டாம் பரிசு - வாகை | பிரவீணா சீனிவாசன், நிக்ஷிதா ரகுராமன், சாய் மித்ரா அழகர்ராஜ், ஹர்ஷினி கோலப்பன், யாழினி விஸ்வநாதன், நவீன்ராஜ் கார்த்திக்கேயன் |
| மூன்றாம் பரிசு - அரும்புகள் & சுட்டி பசங்க | அத்வைத் ஆனந்த், விஷ்வா சிவசக்தி, சாதனா சிவசக்தி, ஷஷ்வத் சந்தானகிருஷ்ணன், தேஜஸ்வி பார்த்தசாரதி, ஜெய் பிரதீஷ் பார்த்தசாரதி, கிருஷன் கிரிராஜ், மகிழினி உதயகுமார், நக்ஷத்ரா கார்த்திகேயன், விஸ்வேஷ் யுவராஜ், கிரிஷிவ் யுவராஜ், ஜோத்ஸ்னா சுவாமிநாதன், ஸஷ்வத் ராமச்சந்திரன், அதிரூப் ஆனந்த், சஞ்சீவ் சந்திரசேகர், மிதுனிகா தினேஷ் குமார், சாஷினி அருள் பிரகாஷ் காயத்ரி |

**2023–2024 கல்வியாண்டின் முடிவில் நினைவாற்றல் போட்டி , கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, நாடகப்போட்டி முதலியன குழந்தைகளுக்கு நடத்தப்பட்டன. வெற்றி பெற்றவர்கள் பட்டியல் விவரங்கள் போட்டி முடிவுகள்**

# மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களுடன்



























STAIRS
3
NO ROOF ACCESS
EXIT GROUND LEVEL





























# நிகழ்வுகள்

**தீ எச்சரிக்கைப் பயிற்சி** - துணை முதல்வர் தலைமையில் முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் உதவியுடன் மாணவர்களுக்கு அளிக்கப்பட்டது. மாணவர்கள் துடிப்புடன் செயல்பட்ட தருணங்கள் இதோ....












# போட்டிகள் மற்றும் பயிற்சிகள்




























# திறமை நிகழ்ச்சி

பேச்சுத்திறன் மற்றும் மேடை நிகழ்ச்சித் திறனை வெளிப்படுத்தும் வகையில், மாணவர்களுக்கு திறமை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அவற்றுள் சில இங்கே...












I WAS BORN TO SHINE!


EXPLORER




Levi's




BEST SIS













